**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09042025-9013

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 14.01.2025

Accepted: 19.03.2025

Published: 01.04.2025

Citation:
Iyyappan, K. "Concubine in Sangam Literature." *Shanlax International Journal of Tamil Research,* vol. 9, no. 4, 2025, pp. 19–27.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.9013

*Corresponding Author:
agniiyyappan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Concubine in Sangam Literature

**K. Iyyappan**
*Guest Lecturer, Department of Tamil*
*L. N. Government College, Ponneri*
*https://orcid.org/0000-0002-1789-961X*

**Abstract**

*We know from the Tolkappiyam"s Concubine that in ancient society, the hero had relations with a woman other than his wife, the Concubine (Asainayaki). The Tolkappiyam"s Poruliyal 172-th verse explains that a concubine and a hero have all the duties and rights that a concubine can have. People like Ilparathai, Kamakkizhathi and Kadarparathai are chaste. They do not indulge in pleasure with any man except a hero. They are now given the names of Aasinayagi, Chinnaveedu, Vaipatti, and Koothi. Sangam literature also shows the prostitutes, i.e., the prostitutes, as another category. Moreover, Concubine are women whom the hero marries without anyone knowing or only with the knowledge of a few people. The evidence for this is the songs 36, 46, 66, 166, and 206 of the Akananuru and the song 313 of the Natrinai. The 16th heroine of the Akananuru would not have called the hero"s Concubine 'Engaiyar". Therefore, it is clear that Concubine s is not 'prostitutes". It is not only the heroine who grieves over the separation from the hero, but sometimes the Concubine as well. This sorrow can be found in the songs 90, 216 of the Natrinai, 238 of the Kurunthokai, and 146 of the Akananooru. If the Concubine were prostitutes, this sorrow would not have afflicted them. This makes it clear that the Concubine were not prostitutes. There are no records in the Sangam literature of a hero taking another man"s wife as his Concubine.*

***Keywords:*** *Concubine, Vaipātti, Ilparathai, Kamakkizhatthi, Kadarpārathai, Sangam Literature*

**References**

1. Dakshinamoorthy, Dr. A., Thamizhar Nagarigamum Panpadum, yaazh Veliyeedu, Chennai, 2008
2. Gopalaiyar, T.V., Thamizh Ilakkana Perakarathi, Porul- Akam- 1, Tamizhman Pathippagam, Chennai, 2004
3. http://arignaranna.info/kalanj_samudhayam3.htm
4. http://thamaraithamil.blogspot.com/2014/09/blog-post_97.html
5. https://newindian.activeboard.com/t60286401/topic-60286401
6. Karthikeyan, Ku. (Editor), Thamizh Ilakkiyangal munnedukkum vaazhviyal, Iyal Pathippagam, Thanjavur, 2021
7. Manikkanar, V. Suba., Thamizh kadhal, Saradha Pathippagam, Chennai, 2012
8. Murugesan, C.S., Varalatril Devadhasigal, Kurinji, Chennai, 2004
9. Prapanjan, Thazha Parakkatha Parathiyar Kodi, Discovery Book Palace, Chennai, 2016
10. Puliyur kesigan (Thelivurai), Tolkappiyam, Pari Nilayam, Chennai, 2009
11. Sandhiya Natarajan(P), Madurai Tamizh perakarathi (Muthal Pagam), Sandhiya Pathippagam, Chennai, 2004
12. Selvarasu, Silambu N., Valluva Penniyam, Thayaram, Puducherry, 2002
13. Singaravelu Mudaliar, A., Abhidhana Chintamani, Asian Educational Services, Chennai, 2010
14. Subramanian, S.V., Sanga Ilakkiyam Ettuthogai, Thokuthi-1, Manivasagar Pathippagam, Chennai, 2010
15. Subramanian, S.V., Sanga Ilakkiyam Ettuthogai, Thokuthi-3, Manivasagar Pathippagam, Chennai, 2010
16. Universal Deluxe Dictionary, English- English- Tamil, Deluxe Publishers, Coimbatore, 2016

# சங்க இலக்கியங்கள் காட்டும் ஆசைநாயகியர்

***முனைவர் கி. அய்யப்பன்***
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
உ. நா. அரசினர் கல்லூரி, பொன்னேரி

***ஆய்வுச் சுருக்கம்***
*பண்டையச் சமூகத்தில் தலைவன் மனைவியை விட ஆசைநாயகியரிடம் உறவு கொண்டிருந்ததைத் தொல்காப்பியத்தின் காமக் கிழத்தியர் கூற்றின் வழி அறிகிறோம். காமக்கிழத்திக்கும், தலைவிக்கு இருக்கக்கூடிய கடமைகளும் உரிமைகளும் இருக்கின்றன என்பதனைத் தொல்காப்பியம் விளக்குகின்றது. இல்பரத்தை, காமக்கிழத்தி, காதற்பரத்தை போன்றோர் கற்பு நெறி கொண்டவர்கள். இவர்கள் ஒரு தலைவனைத் தவிர வேறு ஆணிடம் இன்பம் துய்க்காதவர்கள். ஆசைநாயகியர் யாருக்கும் தெரியாமலோ அல்லது சிலருக்கு மட்டும் தெரிந்தோ தலைவன் மணந்துகொள்ளும் பெண்கள் ஆவர். தலைவனைப் பிரிந்து வருந்துவது தலைவி மட்டுமல்ல, சிலவேளைகளில் ஆசைநாயகிகளும்தான். ஆசைநாயகிகள் விலைமகளிர்களாக இருந்தால், சோகம் அவர்களை வாட்டியிருக்காது. இதன்மூலம் ஆசைநாயகிகள் விலைமகளிர்கள் அல்லர் என்பது தெளிவாகின்றது. தலைவன் பிறனொருவன் மனைவியை ஆசைநாயகியாகக் கொண்டதாகச் சங்க இலக்கியங்களில் பதிவுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.*

***குறிச் சொற்கள்:*** *ஆசைநாயகியர், வைப்பாட்டி, இல்பரத்தை, காமக்கிழத்தி, காதற்பரத்தை, சங்க இலக்கியம், தொல்காப்பியம்*

## முன்னுரை

பழந்தமிழ்ச் சமூகத்தில் ஆணாதிக்கச் சூழல், ஓர் ஆண் பல பெண்களோடும் கூடி வாழுதல் தவறில்லை என்ற கருத்தினைக் கொண்டிருந்துள்ளது. பண்டைய காலத்தில் திருமணம் செய்துகொண்ட ஆண் இரண்டாவதாக வேறொரு பெண்ணை இச்சைக்கு உட்படுத்தி அவளைக் கட்டுப் பாட்டில் வைத்துள்ளான். அவளே காமக்கிழத்தி ஆவாள். அதாவது தலைவனானவன் காமம் மட்டுமே பொருளாகக்கொண்டு அவளோடு கூடி வாழ்வான் என்று திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். பரத்தையர்கள் சங்க இலக்கியப் பாடல்களில் உரையாசிரியர்களால் காட்டப்பட்டாலும், இப்பரத்தையரைப் பற்றிய குறிப்பு மூலப் பாடல் அடிகளில் இடம்பெறவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது. இவர்களில், இல்பரத்தை, காமக்கிழத்தி, காதற்பரத்தை போன்றோர் கற்பு நெறி கொண்டவர்கள். இவர்கள் ஒரு தலைவனைத் தவிர வேறு ஆணிடம் இன்பம் துய்க்காதவர்கள். சங்க இலக்கியங்கள், சேரிப் பரத்தயை மற்றொரு வகையினராகவும் காட்டியுள்ளனர். பழங்காலம் முதல் தற்காலம் வரையில் தலைவிக்கு நிகராகத் திகழும் காமக்கிழத்தியர் என்ற ஆசைநாயகியர் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## காமக்கிழத்தியர் - பொருள் விளக்கம்

காமக்கிழத்தி எனும் சொல்லானது சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்ட ஒரு சொல். பொதுவாகப் பரத்தை, காமக்கிழத்தி, கொண்டி மகளிர், பொதுமகள், பொருட்பெண்டிர், வரைவின் மகளிர், விலைமகள், கணிகை, சலதி, வேசி, தேவரடியாள் என்ற பெயர்களில் தமிழிலக்கியங்களில் பெண்கள் சுட்டப்படுகின்றனர். பரத்தையர்கள் பல முறைகளில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள். தனிநபர் ஒருவனுக்கு உரிமை பூண்டு, பொதுவாகத் தம்மை விரும்பி வருபவர்களிடமும், தாம்

விரும்பும் நபர்களிடமும் அவர்கள் உறவு கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள் (பிரபஞ்சன், 2016: 160) ஆங்கிலத்தில் திருமணம் இன்றி ஒருவருடன் கூடி வாழும் பெண்ணை concubine/ woman who lives with a man without legal marriage.(Universal Deluxe Dictionary, 2016;361) என்று குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

காமக்கிழத்தி என்னும் ஆசைநாயகியர் தலைவன் இன்பம் துய்ப்பதற்கென்றே கொண்ட பரத்தையரிற் சிறிது சிறப்புற்றவள்; தனக்கு முன்னவளாகவும் உயர்வுடையவளாவும் திகழும் தலைவியைப் போற்றும் இயல்பினள். சேரிப்பரத்தையர் போலப் பலர்க்கும் உரியராதலின்றி ஒருவனுக்கே உரிமை பூண்டு வரும் குலப்பரத்தையர் மகளிராய்க் காமம் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டவர். (கோபாலையர், 2004:247) என்ற விளக்கத்தின் அடிப்படையில் “காமக்கிழத்தியர்” என்றால் காமத்திற்காகக் கொண்ட மனைவி, அதாவது தலைவனின் காமத்தைத் தணிப்பதற்கென்று அவனுடைய மனைவி நிலையில் இருப்பவள். இவ்வகைப் பெண்கள் தலைவனது செல்வ நிலையறிந்து வாழ்க்கை நடத்தும் குணமுடையராகி, தலைவன் மீது அன்பு பூண்டு வாழ்க்கை நடத்தும் அயல் மகளிர் என உரையாசிரியர்கள் விளக்கமளிக்கின்றனர். இவர்கள் தக்க பருவத்தே காதலுற்று முறையாகக் களவொழுக்கமொழுகி மணஞ்செய்து கொள்ளாமல் அல்லது களவொழுக்கமொழுகாமலும், மணம்செய்து கொள்ளாமலும் காமத்திற்காக மனைவியர் போல இருந்து வருபவர். (முருகேசன்,2004:21).

பரத்தையருள் ஒரு வகையினராகக் கருதப்படும் காமக்கிழத்தியர், பரத்தையரிலிருந்து வேறுபட்டவராகக் காட்டப்படுகின்றனர். பகைப்புலத்திலிருந்து கவர்ந்து வரப்பட்ட கொண்டி மகளிர் வேறு வழியின்றி இவ்விழிந்த வாழ்வை மேற்கொண்டனர். இவர்கள் ஆடல் பாடல்களில் சிறந்திருந்தனர். இக்கலையறிவு ஆடவர்களை ஈர்க்க அவர்கட்கு உதவிற்றுப் போலும்! இளைஞர்களை மயக்கிப் பொருள் பறித்த பரத்தையர்களை மதுரைக்காஞ் (549 - 589) பேசுகின்றது. இவர்களில் சிலர் ஒருவனுக்கே உரிமை பூண்டனர். அவர்கள் காதற் பரத்தையராவர். (தட்சிணாமூர்த்தி, 2008:544) என்று தட்சிணாமூர்த்தி கூறுவதை கவனிக்க வேண்டியுள்ளது. இவர் பலருக்கு உரியவரன்றி யொருவர்க்கேயுரிமை பூண்டு வரும் குலப்பரத்தையர் மகளிராய்க் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டவர்கள் (சிங்காரவேலு முதலியார், 2010:408)

## தொல்காப்பியம் காட்டும் காமக்கிழத்தியர்

இல்லக்கிழத்தி என்பவள் மனைவி. காமக்கிழத்தி என்பவள் தலைவனின் வைப்பாட்டி. இவளும் தலைவன் ஒருவனுடன் வாழ்பவள். கோவலனுடன் மட்டும் வாழ்ந்த மாதவியைக் காமக்கிழத்திக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இவள் எப்படி நடந்துகொள்வாள் என்று தொல்காப்பியம் கற்பியல் நூற்பா விளக்குகிறது. காமக்கிழத்தி தலைமகனைத் திருமணம் செய்துகொண்டு, தலைவனின் இரண்டாம் மனைவியாக வாழ்கின்றாள் என்பது புலப்படுகின்றது. மேலும், காமக்கிழத்திக்கும், தலைவிக்கு இருக் கக்கூடிய அனைத்து கடமைகளும் உரிமைகளும் இருக்கின்றன என்பதனை தொல்காப்பிய பொருளியல் நூற்பா விளக்குகின்றது.

**அவன்சோர்வு காத்தல் கடன்னெனப் படுதலின்**
**மகன் தாயுயர் புந்துன்னுயர் பாகுஞ்**
**செல்வன் பணிமொழி இயல்பாக லான**
**(தொல்.பொருள்,172)**

காமங்காரணமாக திருமணம் செய்து கொண்ட காமக்கிழத்தி, தலைவிக்கு அடுத்த நிலையில் வைத்து கருதப்படுகிறாள். ஆகவே காமக்கிழத்தி தலைவனின் இரண்டாவது மனைவியாக இருக்க வாய்ப்புண்டு என்று கருதலாம்.

ஓர் ஆண் காமக்கிழத்தியரிடம் தொடர்பு கொண்டு வாழும்பொழுது அக்காமக்கிழத்தியிடம் தலைவி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதனையும் தொல்காப்பியம் கூறுகின்றது.

**தாய் போற் கழறித் தழீஇக் கோடல்**
**ஆட்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிய**
**கலவொடு மயங்கிய காலையான**
**(தொல்.பொருள்,171)**

என்ற நூற்பா தலைவியானவள் காமக்கிழத்தியிடம் தாய் போல் பேசித் தழுவி நடந்துகொள்ள வேண்டும் என்று கூறுகிறது. இதன் மூலம் தலைவன் மணந்துகொண்ட தலைவி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதும், இரு பெண்களும் ஒற்றுமையோடு வாழ வேண்டும் என்பதும் தெரியவருகிறது. தொல்காப்பியத்தில்,

**காமக்கிழத்தி மனையோள் என்றிவர்**
**(தொல். பொருள், 144)**

என்ற நூற்பாவில் தலைவிக்கு அடுத்த நிலையில் காமக்கிழத்தியர் இருந்ததை அறியமுடிகிறது.

பண்டையச் சமூகத்தில் தலைவனானவன் மனைவியைவிட வேற்று பெண்ணான ஆசைநாயகியரிடம் உறவு கொண்டிருந்ததைத் தொல்காப்பியத்தின் காமக்கிழத்தியர் கூற்றின் வழி அறிகிறோம். "தலைவன் பிறரிடம் சென்று சேர்தலை அறிந்து ஊடல் கொள்ளும்போதும், மனைவி இன்னபிறர் காமக்கிழத்தியரை இகழ்ந்துரைக்கும் போதும், தலைவனுக்கு புதல்வன் பிறந்தான் என மகிழும் போதும், களவுக்குப் பின்னர் மணம் செய்துகொண்ட மனைவி செய்யும் செயல்களால் தம் பொறுமை கடந்து துன்புறும்போதும், காதல் சோர்வினாலும், இல்லறக் கடமையைச் செய்ய வேண்டும் என்பதாலும், தலைவியைத் தாய் போல தழுவி அன்பாகப் பேசி வெறுப்பின்றி தலைவனோடு தலைவியை இணைக்கும்போதும், தலைவனின் புதல்வனைத் தழுவி அணிகலன் அணிவித்து அவனையே வாயிலாகக் கொண்டு வருமிடத்தும், மனைவியை ஒத்தவள் என்ற கருத்தோடு தன்னை ஒத்த ஏனைய மகளிரினும் தானும் உரிமையுடையவள் என நினைக்குமிடத்தும், தலைவனுடன் விளையாடும் விளையாட்டின் போதும் காமக்கிழத்தி பேசுமிடங்களாகத் தொல்காப்பியத்தின் கற்பியல் நூற்பா எடுத்துரைக்கிறது. இதன்மூலம் காமக்கிழத்தியின் தகுதியும், அவள் பரத்தையரிலிருந்து வேறுபட்டவள் என்பதும் தெரிந்துகொள்ள முடிகிறது.

### சங்க இலக்கியங்களில் ஆசைநாயகியர்

தொல்காப்பியம் என்ற இலக்கண நூலிலும் சங்க இலக்கியங்களில் காலத்தால் பிற்பட்ட பரிபாடலையும் மதுரைக்காஞ்சியையும் தவிர்த்து பிற நூல்களில் விலைமகளிர் பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால், தலைவனின் ஆசை நாயகிகள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. தலைவனின் மனைவிக்குதான் இல்லறக் கடமைகளும் சொத்தும் சமூகச்செயல்பாட்டு உரிமைகளும் வாரிசு உரிமையும் உண்டு. ஆசைநாயகிகளுக்கு அவ்வுரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. இதனை நற்றிணையின் 330-ஆவது பாடலும் அகநானூற்றின் 16-ஆவது பாடலும் விளக்கியுள்ளன. இல்வாழ்வில் "கற்பு" என்பது இல்லறக் கடமையாற்றுவதைக் குறித்தது. அக்கடமையைச் செய்யத் தகுதியற்றவர்களாகக் கருதப்படும் ஆசைநாயகிகளைக் கற்பற்றவர்கள் என்று கருதினர். பின்னாளில்தான் கற்பு என்பது உடல், மனம் சார்ந்ததாகக் கருதப்பட்டது. தலைவனுக்குரிய மனைவி யார், ஆசை நாயகிகள் யாவர் என்ற வகைப்பாட்டினை விளக்கக் கரணம் என்ற திருமணம் உதவியது. திருமணம் செய்துகொண்ட பெண் தான் தலைவனின் அதிகாரபூர்வமான மனைவி. யாருக்கும் தெரியாமலோ அல்லது சிலருக்கு மட்டும் தெரிந்தோ தலைவன் மணந்துகொள்ளும் பெண்கள் ஆசைநாயகியர் ஆவர். இதற்குச் சான்றுகளாக அகநானூற்றின் 36, 46, 66, 166, 206 ஆகிய பாடல்களும் நற்றிணையின் 313-ஆவது பாடலும் உள்ளன.

### காமக்கிழத்தி – செவிலி : விளக்கம்

சங்கச்சமூகத்தில் இரண்டாவது மனையாளாக இருக்கிற காமக்கிழத்தியே பிற்காலத்தில் செவிலி என்ற கருத்தும் தோன்றுகிறது. காரணம், ஓர் குடும்பத்தின் உறுப்பினர்களுள் "செவிலித் தாய்"க்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. குடும்பத்தின் இரண்டாவது மனையாளாகவே செவிலித்தாய் களவு, கற்பு வாழ்க்கையில் ஈடுபடுகிறாள். குடும்பத்திலுள்ள ஓர் இளம்பெண் வேறு ஒரு ஆணுடன் காதல் வாழ்வில் ஈடுபட, அதனை அறிந்து கொள்ளுதல், வெறியாட்டு நிகழ்த்துதல் தொடங்கி, அப்பெண் ஆண்மகனுடன் உடன்போக்கு சென்று திருமணம் செய்து கொள்ள அவர்களைத் தேடிச் செல்லுதல்,

இல்லற வாழ்க்கையை உணர்த்துதல் வரையும் செவிலித் தாயின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் உடையதாய் காணப்படுகின்றது. தலைவியைப் பெற்ற தாயினை 'நற்றாய்' என்றும் தலைவியை வளர்க்கும் தாயைச் 'செவிலித்தாய்' என்றும் இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. ஆதலால், செவிலித்தாய் என்பவள் தலைவியின் தந்தைக்கு ஆசைநாயகியாக இருக்கவும் வாய்ப்பிருக்கிறது என்று கருதுவதற்கு இடமாகிறது. காரணம், சங்க இலக்கியங்களில் தலைவியின் தோழியாக வருபவள் செவிலித்தாயின் மகள் இல்லை. செவிலித்தாய்க்கு மகனோ, மகளோ இருப்பதாக இலக்கியத்தில் குறிப்புகள் இல்லை.

### கூத்தி- சொல்லும் பொருளும்

பழந்தமிழ்ச் சமூகத்தில் கூத்து நிகழ்த்தும் கலைஞர்கள் ஆணாக இருந்தால், அவர்கள் 'கூத்தன்' என்றும், பெண்ணாக இருந்தால் அவர்கள் 'கூத்தி' என்றும் அழைக்கப்பட்டனர். சங்கத்தமிழர்கள் வாழ்வில் கூத்தனும், கூத்தியும் உயர்வான இடத்தைப் பெற்று வாழ்ந்தவர்கள் ஆவர். ஆரியர்களின் ஆதிக்கத்தில் கோயில் என்ற நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 'கூத்து" என்னும் கலை வந்தபின்பு, இறைவனுக்கு ஒப்பாகப் போற்றப்பட்ட 'கூத்தன்', 'கூத்தி' என்ற பெயர்கள், 'கூத்தாடி' என்றும், 'கூத்தியாள்' என்றும் 'இழிவான' பொருளாக மாறின. 'கூத்து' இயற்றும் பெண்கள், கோயிலில் தொடர்ந்து வாய்ப்புப் பெறவேண்டுமானால், கோயில் மேலாண்மை செய்யும் உயர்குடி ஆரியர்களிடமும், செல்வந்தர்களிடமும் தங்கள் பெண்மையை அடகு வைக்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டனர். எப்போது கூத்து இயற்றும் பெண்களான 'கூத்தி'களை பாலியல் கட்டாயத்துக்கு ஆரியர்களும் செல்வந்தர்களும் உட்படுத்தினார்களோ, அக்கால கட்டத்துக்குப் பின்னர் 'கூத்தி' என்னும் பெயர் 'வைப்பாட்டி' (ஆசைநாயகி) என்னும் பொருளிலேதான் வழங்கப்பட்டு வருகிறது.

### ஆசைநாயகியரின் திருமண உரிமை

இல் மகளிராய்க் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதிலிருந்து காமக்கிழத்திக்குத் தலைமகனோடு திருமணம் நடைபெற்றதை அறியமுடிகிறது. இதனைச் சங்க இலக்கியப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

**நறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு**
**வதுமை அயர்ந்தனை என்ப அலரே**
**(அகநானூறு, 36:11-12)**

என்ற அகநானூறு பாடல் அடிகளிலிருந்து காதற்பரத்தையரைத் தலைவன் திருமணம் செய்துகொண்ட செய்தி அலராக எழுந்தது என்பதனை அறிய முடிகிறது. அகநானூறு பாடல்,

**ஒண்தொடி ஆயத்துள்ளும் நீநயந்து**
**கொண்டனைஎன்ப ஓர் குறுமகள் அதுவே**
**(அகநானூறு, 96: 9-10)**

காதற்பரத்தையருள் இளைய மகளை விரும்பி தலைமகன் மணம் செய்து கொண்டதனை ஊரார் கூறுகின்றனர் என்றும் அறியமுடிகிறது.

**உறைஇறந்து ஒளிரும் தாழ் இருங் கூந்தல்,**
**பிறரும் ஒருத்தியை நம்மனைத் தந்து**
**வதுவை அயர்ந்தனை யென்ப**
**(அகநானூறு, 46:8-10)**

என்ற பாடலிலிருந்து, காதற்பரத்தையரை வீட்டிற்கு அழைத்து வந்து திருமணம் செய்து கொள்வதும் உண்டு என்பது புலப்படுகின்றது.

### ஆசைநாயகியரின் தாய்மை உணர்வு

தலைவன் ஆசைநாயகியைத் திருமணம் செய்து கொண்டாலும், அவர்கள் தாய்மைப் பேறு அடைந்தனர் என்பதற்கு இலக்கியம் வழி சான்றுகள் இல்லை.

**காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி**
**வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற**
**மல்ல லூரன் எல்லினன் பெரிதென**
**மறுவருஞ் சிறுவன் தாயே**
**தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.**
**(குறுந்தொகை, 45)**

என்ற ஆலங்குடி வங்கனாரின் குறுந்தொகைப் பாடலின் வழி, காதற்பரத்தையர் மக்கள் பேற்றிற்கு ஆகாமையைக் குறிப்பால் உணர முடிகின்றது.

ஐங்குறுநூற்றின் பாடல், ஆசைநாயகியின் ஏக்க உணர்வினை விளக்குவதாக அமைந்துள்ளது.

**வெண் தலை குருகின் மென் பறை விளி குரல்**
**நீள் வயல் நண்ணி இமிழும் ஊர**
**எம் இவண் நல்குதல் அரிது**
**நும் மனை மடந்தையொடு தலைப்பெய்தீமே**
**(ஐங்குறுநூறு, 86)**

என்ற பாடலிலிருந்து, தலைவன் ஆசைநாயகியின் வீட்டில் இருக்கும் பொழுது, தோழியர் வந்து, அவனின் மகனைப் பற்றி புகழ்ந்து பேச, அதனால் தலைவன் நெஞ்சம் மகிழ்ச்சி அடைகிறது. அத்தனை அறிந்து, ஆசைநாயகி அழுக்காறடைந்து தலைவனைத் தலைவியின் இல்லத்திற்குச் செல்லும்படி கூறுவதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியங்களில் எதிலும் காதற்பரத்தைத் தாய்மை அடைந்ததாகவோ, குழந்தை ஈன்றதாகவோ குறிப்பு இடம்பெறவில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும்.

சங்கப் பாடல்களில் பரத்தையர்கள் பொருளையெல்லாம் வவ்வினார்கள் என்றோ, அது காரணமாக ஆடவர்கள் வறுமை யெய்தினார்கள், குடி கெடுத்தார்கள் என்றோ, அதுபற்றித் தலைவியர் பிணங்கினர் என்றோ, மருதப் பாடல்கள் மொழிந்தில. தலைவனது சிறுவனைத் தெருவிடைக் கண்டபோது பரத்தையர்கள் அவனுக்குத் தொடியும் மோதிரமும் அணிந்து விடுத்தார்கள் (மாணிக்கனார், 2012:243) என்பதை கலி.82, 84 பாடல்கள் நுவலுகின்றன. இதனால் இம்மங்கையர் பொருட்பெண்டிரல்லர் என்பது தெளிவாகிறது.

### ஆசைநாயகி தலைவியைப் பழித்துக் கூறுதல்

ஆணின் ஒழுக்கக் கேட்டால் தலைவியும், காமங் காரணமாக அவனால் வரைந்து கொள்ளப்பட்ட ஆசைநாயகியும் பாதிப்புக்கு உள்ளானார். ஆசைநாயகியைப் பிரிந்து தலைவன் தலைவியிடம் சென்று அவளைப் பெரிதும் விரும்பி ஒழுகுகின்றான் என்று பிறர் கூறுவதைக் கேட்ட ஆசைநாயகி, தலைவியைப் பழித்துக் கூறுவதை ஐங்குறுநூறு பாடல் பதிவு செய்துள்ளது. அவை,

**அம்ம வாழி பாண எவ்வைக்கு**
**எவன் பெரிது அளிக்கும் என்ப பழனத்து**
**வண்டு தாது ஊதும் ஊரன்**
**பெண்டு என விரும்பின்று அவள் தன் பண்பே**
**(ஐங்குறுநூறு, 89)**

என்ற பாடலில், தலைவன் தலைவியிடம் அன்பாய் இருப்பது அவள் பால் அமைந்த நற்குணமே ஆகும். அவளுடைய பெண்மை நலமன்று என்று அழுக்காறுடன் கூறுவதாக அமைந்துள்ளது. மேலும், ஆசைநாயகி குறித்து ஐங்குறுநூற்றின் 90- ஆவது பாடலில், வண்டு கள் பல மலர்களில் பறந்து சென்று தேனை உண்டது, மரபு. தலைவனும் அது போன்று பரத்தையரிடமும் இணைந்து மகிழ்கிறான். தலைவன் குணத்தை வண்டுகள் பெற்றனவா, வண்டுகள் குணத்தைத் தலைவன் பெற்றானா? அறியவில்லை. அவ்வாறிருக்கத் தலைவனின் புதல்வனின் தாயாகிய தலைவி எம்முடன் சண்டையிடுகிறாள் (சுப்பிரமணியன், 2010:668) என்று ஆசைநாயகி கூறுவதை அறியமுடிகிறது.

### தலைவனுக்கு - ஆசைநாயகியர் மற்றும் பிற பரத்தையர் தொடர்பு

சங்ககாலச் சமூகத்தில் தலைவன் காதற் பரத்தையைத் திருமணம் செய்துகொண்டு, அவளை விட்டுப் பிரியாமல் வாழ்ந்தான் என்றும் சொல்வதற்கு இல்லை. காதற்பரத்தையையும் விடுத்து, வேறு சில பரத்தையரை அவன் நாடிச் செல்கின்றான். (கார்த்திகேயன்,2021:141) ஆசைநாயகி விழாக்களத்திற்குச் செல்லாமல் தன் வீட்டில் இருந்தாள். அப்பொழுது இளமகள் ஒப்பனையோடு செல்வதை அறிந்து தலைவன் இவளைப் பார்த்தால் அக்கணமே அவளிடம் சென்று விடுவானோ, இதை உணராமல் நான் பொழுதை வீணே கழித்து விட்டேனே (நற்றினை, 370) என்று ஆசைநாயகி வருத்தப்படுவதிலிருந்து தலைவன் ஏனைய பரத்தையரையும் நாடிச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தான் என்பதை அறியமுடிகின்றது.

தலைவனால் காம இன்பத்திற்காக வரைந்து கொள்ளப்பட்ட ஆசைநாயகி, அவன் சேரிப்பரத்தையிடம் சென்றான் என்பதனை அறிந்து அவன் தன்னில்லம் சென்றபோது ஊடிச் செல்வதாக அகநானூறு பாடல் ஒன்று அமைந்துள்ளது.

**துய்த் தலை முடங்கு இறாத் தெறிக்கும், பொற்புடைக்**
**குரங்குஉளைப் புரவிக் குட்டுவன்**
**மரந்தை அன்ன, என் நலம் தந்து சென்மே!**
**(அகநானூறு, 376:16-18)**

என்ற பரணரின் பாடல் வரிகளில், தலைவன் தன் நலத்தை அழித்துவிட்டு வேறு பரத்தையரிடம் செல்வதைக் ஆசைநாயகி இடித்துக் கூறுவதாக விளங்குகின்றது.

அகநானூற்றில் பரணரின் 396-ஆவது பாடலிலும், தலைவனை இடித்துக் கூறும் ஆசைநாயகி கூற்றாக அமைந்துள்ளது.

**தெறலருங் கடவுள் முன்னர்த் தேற்றி**
**மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்து**
**ஆர்வ நெஞ்சம் தலைத்தலை சிறப்பநின்**
**(அகநானூறு, 396:7-9)**

என்னும் பாடல் அடிகளில் தெய்வத்தின் முன் நின்று யான் இனி நின்னிற் பிரியேன் என்று சொல்லிய சொல்லைக் கடந்து என்னைக் கைவிட்டு நீ விரும்பிய பரத்தையர் வீடுதோறும் செல்கின்றாய் என ஆசைநாயகி தலைவனை இழித்துரைக்கிறாள்.

நற்றிணையில் 320-ஆவது பாடல், ஒரு ஆசைநாயகி தன் தலைவன் தன்னைப் பிரிந்து பிறிதொரு பரத்தையிடம் சென்றதால் வருந்திக் கூறுவதாக அமைந்துள்ளது. அப்படியென்றால் அந்தப் பரத்தை கைவிடப்பட்டவள் ஆகிறாள். அவள் இனி வேறு ஒரு தலைவனைத் தேடிக்கொள்ள வேண்டியநிலைக்குத் தள்ளப்படுகிறாள்.

தலைவனைப் பிரிந்து வருந்துவது தலைவி மட்டுமல்ல, சிலவேளைகளில் ஆசைநாயகிகளும் தான். இச்சோகத்தினை நற்றிணையின் 90, 216, குறுந்தொகையின் 238, அகநானூற்றின் 146 ஆகிய பாடல்களில் காணமுடிகின்றது. ஆசைநாயகிகள் விலைமகளிர்களாக இருந்தால், இச்சோகம் அவர்களை வாட்டியிருக்காது. இதன் மூலமாக ஆசைநாயகிகள் விலைமகளிர்கள் அல்லர் என்பது தெளிவாகின்றது.

### தலைவி ஆசைநாயகியரை "எம்தங்கையர்" எனல்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றின் 16-ஆவது பாடல் பெரியம்மா - சின்னம்மாவின் உறவினை உறுதிப்படுத்தியுள்ளது. தன் தலைவனின் குழந்தையைக் கண்ட ஆசைநாயகி, அவனை அன்போடு அருகே அழைத்து, வருக என்னுயிரே என்று கொஞ்சுகிறாள். அதனைக் கண்ட தலைவி, "குறுமகளே! ஏன் பேதுற்றனை. நீயும் இவன் தாய்தானே!" என்று அன்புறவு பாராட்டுகிறாள். அத்தகைய அன்புறவு பலதார மணத்தில் பின்பற்றப்படுவது தான். ஆசைநாயகிகள் தம் தெருவில் தம் வீட்டில் தனித்திருந்து, தலைவனோடு மட்டுமே வாழ்ந்தனர். அவர்களுக்குப் பிற ஆண்களோடு, எவ்விதமான தொடர்பும் இருக்கவில்லை. அவ்வாறு வெளியாட்கள் பிற ஆண்களோடு தொடர்பிலிருந்தால், தலைவி அவர்களை 'எங்கையர்' என்று அழைத்திருக்க மாட்டாள். ஆக, ஆசைநாயகியர் 'விலைமகளிர் அல்லர்' என்பது தெளிவாகின்றது.

### ஆசைநாயகியர்- குழப்பமும் தெளிவும்

தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள 'காமக்கிழத்தியர்' சொல் விலைமகளிரை குறிக்கவில்லை. 'கிழத்தி' என்றால் தலைவியைக் குறிக்கும். 'கிழவன்' என்பது தலைவனைக் குறிக்கும். 'காமக்கிழத்தியர்' என்பது ஆசைநாயகிகளைக் குறிக்கும். சங்க இலக்கியங்களில் காணப்படும் காமக்கிழத்தி, காதற்பரத்தை, சேரிப்பரத்தை, நயப்புப் பரத்தை, இற்பரத்தை, இல்லிடப்பரத்தை போன்ற சொற்கள் அவ் இலக்கியங்களின் மூலப்பாடலில் இடம்பெறவில்லை. அப் பாடல்களின் திணை, துறை, அடிக்குறிப்புகள், பதவுரை போன்றவற்றில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் அப்பாடல்களைப் புரிந்து கொள்வதற்காகப் பிற்காலத்தில், சங்ககாலத்துக்குப் பின்னர் எழுதப்பெற்றவை.

வெளியாளுக்குத் தன் தலைவனின் இல்கிழத்தி அதாவது தலைவி யார் அவளுடைய பிள்ளைகள் யார் யார் என்பதெல்லாம் நன்றாகத் தெரியும். ஆனால், தலைவிக்குத் தன் தலைவனுக்கு யாரெல்லாம் ஆசைநாயகிகள் என்பது தெரியாது. ஒன்றிரண்டு என்றால் தெரிந்திருக்கும்! வழித்தடத்தில் தன் தலைவனின் தலைவியைச் சந்திக்கும் ஆசைநாயகி,

அவளருகில் சென்று, தன்னை அறிமுகப்படுத்தும் விதமாக, "நான் தூரத்தில் வசிப்பவள். உனக்குத் தங்கை முறையை உடையவள்" என்று கூறித் தலைவியின் நெற்றியையும் கூந்தலையும் அன்புடன் வருடுகிறாள். இந்தப் பாசவருடல் அகநானூற்றின் 386- ஆம் பாடலில் இடம்பெற்றுள்ளது.

## தலைவிக்கும் ஆசைநாயகிக்கும் சண்டை

சங்க இலக்கியங்களில் மருதத்திணை சார்ந்த இடங்களில் மிகுதியாக தலைவிக்கும் ஆசைநாயகிக்கும் இடையே சண்டைகள் நடந்துள்ளது. காரணம், தலைவனிடம் செல்வம் மிகுந்துள்ளது. அவனுக்கு வீடுகள் சிலவற்றைப் பராமரிக்கும் தெம்பும் வந்துவிடுகிறது. தலைவன் ஆசைநாயகியிடம் மிகுதியான நேரத்தைச் செலவிடுவது தலைவிக்குப் பிடிக்கவில்லை. தன் கணவனைக் கட்டுப்படுத்த இயலாத தலைவி, தன் கணவனின் ஆசைநாயகியின் மீது சினத்தைக் காட்டுகிறாள். இதனை அகநானூற்றின் 76, 276, 336, 346 ஆகிய பாடல்களும் குறுந்தொகையின் 8, 164, 80, 364, 370 ஆகிய பாடல்களும் விளக்கியுள்ளன.

## காலத்தின் தேவையான ஆசைநாயகியர்

தமிழ்ச் சமூகம் ஆசைநாயகியரை ஏற்றுக் கொண்டது விபத்து என்றுதான் சொல்ல வேண்டும். பழந்தமிழ்ச் சமுதாயம் முதலில் வேட்டைச் சமுதாயமாக இருந்து பின்னர் போர்ச் சமுதாயமாக மாறியது. வேட்டையிலும் போரிலும் ஆண்களின் உயிரிழப்பு மிகுதியாக இருந்தது. ஆதலால், ஆண் துணையினை இழந்த பெண்கள் மிகுந்திருக்கலாம். அக்காலத்தில் பெண்கள் ஆண்களைவிட எண்ணிக்கையில் மிகுந்ததால் ஓர் ஆண், பல பெண்களை மணக்கும் பலதார மணம் அதற்கு ஒரு சமநிலைத் தன்மையைக் கொண்டுவரும் என்று அச்சமுதாயம் கருதியிருக்கலாம். அப்படியென்றால், ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப் பண்பாடு வாரிசுரிமைக்காகத்தான் பின்பற்றப்பட்டது. வாழ்க்கை நலத்துக்காக அல்ல என்று கருது வதற்கும் இடமாகிறது.

சங்க காலத்தில் ஆசைநாயகியர் மட்டும் தான் இருந்தனர். சங்க இலக்கியங்களில் விலைமகளிர் என்று யாரும் இல்லை. ஆனால் தொல்காப்பியத்துக்கும் சங்க இலக்கியங்களுக்கும் எழுதப்பெற்றுள்ள உரைகளில் விலைமகளிர் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. சங்க இலக்கிய உரைகள், தொல்காப்பிய இளம்பூரணர் உரை போன்றவற்றை பரத்தையரை விலைமகளிராகக் கொள்வதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் இல்லை. (செல்வராசு, 2202:66). மூலப் பாடல்களுக்கும் உரைகளுக்கும் இடைப்பட்ட காலம் மிகப்பெரியது. அதனால்தான், உரையாசிரியர்கள் வாழ்ந்த காலத்தின் சமூக வெளிப்பாடுகளே உரைகளில் பிரதிபலித்துள்ளன. மேலும், சேரிப்பரத்தை முதலான வகைப்பாடுகள் உரையாசிரியர் காலத்தவை. (செல்வராசு, 2202:66). தொல்காப்பிய மூல நூற்பாவில் இடம் பெற்றுள்ள பரத்தை, காமக்கிழத்தியர், பரத்தையர் என்ற சொற்கள் ஆசைநாயகியைத் தான் குறிக்கின்றன. இது சமூகத்தால் ஏற்கப்படாத தலைவனின் பல தார திருமணத்தைக் குறிக்கின்றன.

## முடிவுரை

பழங்காலத்தின் தொடக்கத்தில் ஓர் ஆணின் இரண்டாம் மனைவியாக இருந்த காமக்கிழத்தி என்னும் ஆசைநாயகி பிற்காலத்தில் 'செவிலி' என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என கருத முடிகிறது. திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்வை வாழும் தலைவிக்கு அடுத்த நிலையில் இரண்டாவது மனைவியைப் போல துணைவியாக காமக்கிழத்தி இருந்ததை அறிய முடிகிறது.

ஆசைநாயகியர் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் சில இடங்களிலும், சங்க இலக்கியங்களில் பல இடங்களிலும் விரவிக் கிடக்கின்றன. சங்க மருவிய இலக்கியங்களிலே பரத்தை உறவுகள் தவறெனவும், நீதி இலக்கியங்களிலேயே பிறன் நோக்கா பேராண்மையும், பரத்தை தொடர்பு தவறென காணப்படுகின்றன. காமக்கிழத்தியாகிய ஆசைநாயகி என்பவள் பரத்தையரிலிருந்து வேறுபட்டவள் என்பதும், தலைவியின் குணநலன்களைப் பெற்றவள் என்பதும், தலைவனின் இரண்டாம் மனைவியாக வாழ்ந்தவள் என்பதும்

புலப்படுகின்றன. தலைவன் பிறனொருவன் மனைவியை ஆசைநாயகியாகக் கொண்டதாகச் சங்க இலக்கியங்களில் பதிவுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

## துணைநூற் பட்டியல்


1. கார்த்திகேயன், கு (ப-ஆ), தமிழ் இலக்கியங்கள் முன்னெடுக்கும் வாழ்வியல், இயல் வெளியீடு, தஞ்சாவூர், 2021
2. கோபாலையர், தி.வே., தமிழ் இலக்கணப் பேரகராதி, பொருள்- அகம்- 1, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2004.
3. சந்தியா நடராஜன்(ப), மதுரைத் தமிழ்ப் பேரகராதி(முதல் பாகம்), சந்தியா பதிப்பகம், சென்னை, 2004.
4. சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, ஏசியன் எஜுகேஷனல் சர்வீசஸ், சென்னை, 2010.
5. சுப்பிரமணியன், ச.வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை, தொகுதி-1, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
6. சுப்பிரமணியன், ச.வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை, தொகுதி-3, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
7. செல்வராசு, சிலம்பு நா., வள்ளுவப் பெண்ணியம், தாயறம், புதுச்சேரி, 2002.
8. தட்சணாமூர்த்தி, முனைவர் அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, 2008.
9. பிரபஞ்சன், தாழப்பறக்காத பரத்தையர் கொடி, டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை, 2016.
10. புலியூர் கேசிகன் (தெளிவுரை), தொல்காப்பியம், பாரி நிலையம், சென்னை, 2009.
11. மாணிக்கனார், வ.சுப., தமிழ்க் காதல், சாரதா பதிப்பகம், சென்னை, 2012.
12. முருகேசன், சி.எஸ்., வரலாற்றில் தேவதாசி கள், குறிஞ்சி, சென்னை, 2004.
13. http://arignaranna.info/kalanjsamudhayam3.htm
14. https://newindian.activeboard.com/t60286401/topic&60286401/
15. http://thamaraithamil.blogspot.com/2014/09/blog&post97.html
16. Universal Deluxe Dictionary, English& English& Tamil, Deluxe Publishers, Coimbatore, 2016